# 1 மகிழ்ச்சியான வாழ்க்கைச் சூழல்

மனித சமுதாயத்தின் சகல பிரஜைகளும் ஒருவரோடு ஒருவர் அந்நியோன்யமாக தொடர்புபட்டும், அதே வேளை அவர்களின் வாழ்க்கையில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றதுமான பிரதான அலகு குடும்பமாகும். குடும்பத்தின் அந்நியோன்யமான தொடர்பின் காரணமாகவே ஒவ்வொருவரும் இவ்வுலகில் பிறக்க ஏதுவாக அமைகின்றது. மனித தொடர்புகளைக் கட்டியெழுப்பும் அத்திவாரமாகக் குடும்ப அலகு விளங்குகின்றது. சமூகக் கட்டமைப்பில் மிகச்சிறிய அலகாகவே குடும்பம் அமைகின்றது. குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் உடல், உள, சமூக, பௌதிகத் தேவைகளை முறையாக நிறைவேற்றிக் கொள்ள இயல்வது சிறந்த குடும்பச் சூழலிலும் அவர்கள் வாழும் இல்லத்திலும் ஆகும். முறையாகத் திட்டமிடப்பட்டு ஆயத்தம் செய்யப்பட்ட குடும்ப அலகினூடாக மகிழ்ச்சியான வாழ்க்கைச் சூழலைக் கட்டியெழுப்ப முடியும்.

## குடும்பம்

இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் உரித்தான முதல் சமூக அலகு குடும்பமாகும். இது சமூகத்தின் மிகச்சிறிய திட்டமிடப்பட்ட அலகாகும். சிறிய அலகாகக் காணப்பட்டாலும் சமூதாயத்தில் குடும்பத்திற்கு முக்கிய இடம் அளிக்கப்படுகின்றது. இதற்கான காரணமாக குடும்பமானது ஒருவரது உடல், உள, சமூக, பௌதிகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள உதவியாக அமைந்துள்ளதைக் குறிப்பிடலாம்.

திட்டமிடப்பட்டு ஒழுங்கமைக்கப்பட்ட மனையின் மூலமே ஒவ்வொரு அங்கத்தவரினதும் உடல், உள, சமூக, பௌதிகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும். இதன் மூலம் மகிழ்ச்சியான வாழ்க்கைச் சூழலைக் கட்டியெழுப்ப முடியும்.

''குடும்பம்'' என்ற எண்ணக்கருவை மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ள பல்வேறுபட்ட சமூக விஞ்ஞானிகள் முன்வைத்துள்ள கருத்துக்களை ஆராய்ந்து பார்ப்போம்.

- மனித குடும்பமானது பல உறவுகளின் ஒன்றிணைப்பாகும்.
- விவாகமான இருவரையும் அவர்களது பிள்ளைகளையும் உள்ளடக்கிய சமூக அலகானது குடும்பம் என இனங்காண முடியும்.

Kathleen Gough எனப்படும் மானிடவியல் விஞ்ஞானி குடும்பம் என்ற எண்ணக்கருவை பின்வருமாறு விளக்கியுள்ளார்.

குடும்பம் என்பது பொருளாதார ரீதியாகவும் பிள்ளைகளை வளர்க்கும் போதும் ஒற்றுமையாக செயற்படும் பொதுவான ஒரு வீட்டினுள் வாழும் திருமணமான தம்பதி அல்லது நிறைவான வயதை அடைந்த உறவினர்கள் சேர்ந்த அலகாகும்.

Cock, Paweloozi என்பவர்களது கருத்துக்களுக்கமைய,

குடும்பமானது வாழ்வதற்குத் தேவையான இடத்தையும் அடிப்படைத் தேவைகளையும் வளங்களையும் பகிர்ந்து கொண்டு நீண்ட காலத்திற்கு ஒரே இலக்கை நோக்கிச் செல்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட, ஒவ்வொருவருக்கிடையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பல்வேறுபட்ட நபர்களைக் கொண்ட ஒரு ஒற்றுமையான அலகாகும்.


**மேற்குறிப்பிட்ட கருத்துக்களின்படி**

**பெற்றோர், பிள்ளைகள் மற்றும் உறவினர்களுடனான அந்நியோன்னிய தொடர்புகளுடன் இணைந்த, விசேடமான செயற்பாடுகளை நிறைவேற்றும் ஒரே குறிக்கோளை நோக்கிச் செல்வதற்காக இங்கு ஒழுங்கமைக்கப்பட்ட அலகு குடும்பம் என அறிமுகப்படுத்தலாம்.**

உங்கள் குடும்பத்தில் அல்லது நீங்கள் அறிந்த குடும்பங்களில் வாழும் அங்கத்தவர்கள் தொடர்பாக நினைவுபடுத்திப் பார்க்கையில் சில குடும்பங்களில் பெற்றோர் பிள்ளைகள் மாத்திரம் உள்ளனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவ்வாறே பெற்றோர் பிள்ளைகளை விட தாய்வழி தந்தை வழி, இரத்த உறவினர்களும் அவர்களுடன் வாழ்வதைச் சில குடும்பங்களில் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான பிரதான குணாம்சங்களைக் கொண்டு மானிடவியல், சமூகவியல் விஞ்ஞானிகள் குடும்பத்தை பிரதான இரு தோற்றப்பாடுகள் மூலம் முன் வைத்துள்ளனர்.

- கருக்குடும்பம்
- கூட்டுவிரி- குடும்பம்

## கருக்குடும்பம் (Nucleus family)




உரு 1.1 கருக்குடும்பம்

மேலே தரப்பட்டுள்ள படத்தை நன்கு அவதானியுங்கள் பெற்றோர்களாலும், பிள்ளைகளாலும் மட்டும் கட்டியெழுப்பப்படும் ஒரு குடும்பத்தை இங்கு காணக்கூடியதாக உள்ளது. இக்குடும்பம் கருக்குடும்பம் என அழைக்கப்படும். கருக்குடும்பமானது ஒரு பரம்பரைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக (பெற்றோரும், பிள்ளைகளும்) விளங்கும்.

விவசாய வாழ்க்கைக்குப் பழக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முறையானது சமூக, பொருளாதார காரணி களினால் நகரமயமாக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக தற்போது நகரங்களுக்கண்மையில் கருக்குடும்பங்கள் கூடுதலாக வாழ்வதைக் காணக் கூடியதாக உள்ளது. பல்வேறுப்பட்ட மானிடவியல், சமூக விஞ்ஞானிகள் கருக்குடும்பத்திற்கு பல்வேறு பெயர்களை முன்வைத்துள்ளனர்.

- ஆரம்பக் குடும்பம்
- உப குடும்பம்
- தனிக்குடும்பம்
- பிரதானகுடும்பம்
- அடிப்படைக் குடும்பம்

**கருக்குடும்பத்தின் கட்டமைப்பை பின்வரும் அட்டவணை மூலம் இனம் காண்க.**




கருக்குடும்பமாக வாழும் போது கிடைக்கும் அனுபவங்கள் தொடர்பாக மேலும் ஆராய்ந்தால் கருக்குடும்பத்தில் குடும்ப அங்கத்தவர்களது எண்ணிக்கை குறைவாக இருப்பதனால் அவர்களது சுயாதீனம், தனித்துவம், பேணப்படுவது வெளிப்படையாக அமைகின்றது. ஆயினும் குடும்பத்தின் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் தோன்றுவதற்கும் இங்கு இடமுண்டு.

உதாரணம் :-

- பெற்றோர் வேலைக்குச் செல்வதனால் குழந்தைகளைப் பராமரிக்க முடியாத நிலையில் வேலையாட்களிடம் அல்லது பிள்ளை பராமரிப்பு நிலையங்களில் (Day care) ஒப்படைத்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

- பெற்றோர் சுகவீனமுற்றிருக்கும் போது அல்லது இருவரில் ஒருவர் வீட்டை விட்டுச் செல்ல நேரிடும் போது பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது.


ஒரு பிள்ளை வயது வந்தவர் என்ற நிலைக்குட்படும் போது தோன்றும் உளவியல் பிரச்சனைகளுக்கு முகம் கொடுப்பதற்குத் தேவையான மன உறுதியைப் பெற்றுக் கொள்ளவது சிறு பராயத்தில் இருந்தே குடும்பம் மூலம் கிடைக்கும் போதிய அனுபவத்தினாலாகும். இதனூடாகக் கிடைக்கும் பெற்றோர் பிள்ளைகளுக்கான தொடர்பானது பிள்ளையின் ''ஆளுமை'' வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்து வதைக் காணக்கூடியதாக உள்ளது.

பெற்றோரும் பிள்ளைகளும் மட்டுமே வாழும் கருக்குடும்பத்தில் எழும் பிரச்ச னைகளை கலந்துரையாடி தீர்த்துக்கொள்ளவும், இலகுவாக தீர்மானங்களை எடுக்கவும் முடிகின்றது. அத்துடன் இங்கு வயோதிபர்கள் உறவினர்கள் இல்லாததன் காரணமாக வயோதிபர்களுடனான கருத்து முரண்பாடுகள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் குறைவாக உள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.

கருக்கடும்பத்தில் வாழும் அங்கத்தவர்களிடையே அநேக சந்தர்ப்பங்களில் சுயநலம் காணப்படுகின்றது.

G. P. Murdock என்ற அமெரிக்க மானிடவியல் விஞ்ஞானி கருக்குடும்ப அங்கத்தினர் தொடர்பு பற்றி இவ்வாறான கருத்தை முன்வைத்துள்ளார்.

- கணவன் மனைவிக்கிடையே உள்ள தொடர்பு
- தந்தை தாய்க்கிடையே உள்ள தொடர்பு
- தந்தை மகளுக்கிடையே உள்ள தொடர்பு
- தந்தை மகனுக்கிடையே உள்ள தொடர்பு
- தாய் மகனுக்கிடையே உள்ள தொடர்பு
- தாய் மகளுக்கிடையே உள்ள தொடர்பு
- சகோதரனுக்கும் சகோதரிக்கும் இடையே உள்ள தொடர்பு
- சகோதரிக்கும் சகோதரனுக்கும் இடையே உள்ள தொடர்பு



உரு 1.2 கருக்குடும்பத்தின் அங்கத்தவர்களுக்கிடையிலான தொடர்பின் வலையமைப்பு

இவ்வாறு குடும்பத் தொடர்புகள் கிடையாகவும் நேராகவும் செயற்படும் அதே வேளையில் குடும்ப ஒற்றுமைக்கு இவை வழி வகுப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

## கூட்டுக் குடும்பம் (Extended family)

கூட்டுக் குடும்பத்தில் பெற்றோர், பிள்ளைகளுக்கு மேலதிகமாக இரத்த உறவினர்கள் இருக்க முடியும். அதாவது அவர்கள் தாய்வழி அல்லது தந்தை வழி உறவினர்களாக இருப்பர். பின்வரும் படத்தை அவதானிப்பதன் மூலம் மேலும் இது தெளிவாகும். மூன்று அல்லது நான்கு பரம்பரையைச் சேர்ந்தவர்கள் கூட்டுக் குடும்பத்தில் இருக்க முடியும்.




உரு 1.3 கூட்டு - விரிகுடும்பம்

மானிடவியல் விஞ்ஞானிகள் கூட்டுக் குடும்பத்திற்கு பல்வேறு பெயர்களை முன்வைத்துள்ளனர்.

- இணைந்த குடும்பம்
- விரிவடைந்த குடும்பம்
- ஒன்றிணைந்த குடும்பம்
- விஸ்தரிக்கப்பட்ட குடும்பம்
- பரந்த குடும்பம்

**விரிகுடும்பத்தின் கட்டமைப்பை பின்வரும் அட்டவணை மூலம் இனம் காண்க.**




கூட்டுக் குடும்பமாக வாழும் போது பெறுகின்ற அனுபவம் தொடர்பாக ஆராய்வோம். இவ்வாறான குடும்பத்தில் அதிக அங்கத்தவர்கள் இருப்பதனால் அந்நியோன்னிய தொடர்பு, ஒத்துழைப்பு, பாதுகாப்பு என்பன நன்கு பேணப்படுகின்றன. அத்துடன் தந்தைவழி, தாய்வழி உறவினர்கள் இக்குடும்பத்தில் வாழ்வதால் குடும்பத்தின் அவதானம் தம் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி குடும்பத்தில் உள்ள வயோதிபர் பரம்பரையினர் மீதும், இளையோர் மீதும் செலுத்தப்படுகின்றது. இதன் காரணமாக கூட்டுக் குடும்ப அங்கத்தவரிடையே

- பகிர்வு
- தியாகம்
- பிறர் நலம்
- பொறுமை
- பாதுகாப்பு

போன்ற குணங்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன.

அங்கத்தவர்களது எண்ணிக்கை கூடுதலாகக் காணப்படுவதால் சுயாதீனம் குறைவடைகின்றது. பல்வேறு சந்தர்ப்பங்களில் தீர்மானங்களை எடுப்பதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. தனித்துவம் பேணப்படுவது குறைவாக உள்ளது. சில சமயங்களில் வயோதிபப் பரம்பரையின் கருத்துக்கள், மோதல்களுக்கு ஏற்பட இடமுண்டு.

கூட்டுக் குடும்பமானது சமூகத்தில் மிகவும் மதிக்கப்பட்டு காக்கப்பட்ட குடும்பமாகும். முற்காலத்தில் விவசாய பொருளாதாரம் வெற்றிகரமாகத் திகழ கூட்டுக் குடும்பமானது மிகவும் உறுதுணையாக இருந்தது. அத்துடன் இக்குடும்பத்தின் உழைப்பு காரணமாக கிடைக்கப் பெற்ற பொருளாதார வளத்தை பொதுவாக அனுபவித்தமை இக்குடும்பத்துக்கே உரிய இயல்பாக இருந்தது. தற்போது கிராமிய பிரதேசங்களில் கூட்டுக்குடும்பங்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. நகரை அண்மித்த பகுதிகளில் கூட்டுக் குடும்பங்கள் அரிதாகவே உள்ளன.

குடும்பம்' எனப்படும் குடும்ப அலகு பல்வேறு கால பருவங்களைக் கடப்பதனை அவதானிக்கலாம். அவற்றை மூன்று பிரதான பருவங்களாக முன்வைக்கலாம்.

- ஆரம்பப் பருவம்
- வளர்ச்சிப் பருவம்
- முதிர்ச்சிப் பருவம்

கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை நன்றாக அவதானிக்கும் போது அப்பருவங்களைப் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

குடும்பம்

ஆரம்பப் பருவம்




→ மணமக்களும் அவ்விருவரது புதிய சொந்தங்களும் உருவாகும் பருவம் இதுவாகும். முதல் குழந்தையின் பிறப்புடன் இப்பருவம் நிறைவடைன்றது.

வளர்ச்சிப் பருவம்



→ திருமணமாகி பிள்ளைகள் பிறந்தவுடனே இப்பருவம் ஆரம்பமாகும். பிள்ளைகள் குடும்பத்தில் இருந்து பிரிந்து செல்லும் போது இப்பருவம் நிறைவடையும்.

முதிர்ச்சிப் பருவம்



→ குடும்பத்திலிருந்து பிரிந்து வேறாக பிள்ளைகள் சென்ற பின்பு பெற்றோர் தனிமைப் படுத்தப்படும் பருவம் இப்பருவம். கணவன், மனைவி இருவரில் ஒருவரின் மரணத்தின் பின் தனியே வாழ்வதற்கு தன்னை ஆயத்தம் செய்தல் இங்கு நேரிடும்.


கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை நன்றாக அவதானிக்கும் போது அப்பருவங்களைப் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## குடும்ப அலகின் முக்கியத்துவம்

குடும்பம் தொடர்பாக கவனத்தைச் செலுத்துமிடத்து அதன் முக்கித்துவம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. குடும்ப அங்கத்தினரது அந்நியோன்னிய தொடர்புகளைக் கட்டி எழுப்புவதன் மூலம் வீட்டின் பல்வேறுபட்ட செயற்பாடுகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்வதற்கு குடும்பமும் அங்குள்ள தொடர்புகளும் இன்றியமையாதவையாக அமைந்துள்ளன.

குடும்பத்தின் ஊடாக அங்கு வாழும் அங்கத்தவர்களது உடல், உள, சமூக,பௌதிகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியுமானதாக இருப்பதனால் குடும்ப அலகானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதமுடிகின்றது.

குடும்பம் சார்ந்த செயற்பாடுகளையும் பொறுப்புக்களையும் ஆராய்ந்து பார்ப்போம். பின்வரும் படத்தை அவதானிக்குமிடத்து அதனை உங்களால் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.




உரு 1.4 குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

மேற்காட்டப்பட்ட படத்தின் மூலம் முன் வைக்கப்படும் விபரங்கள் தொடர்பாக ஆராயுமிடத்து விளங்கிக் கொள்வது என்ன?

இது செழுமையாக வளர்ந்த ஒரு தாவரமாகும் என்பதை விளங்கிக் கொள்ளலாம். உணவு, நீர், சூரியவொளி, வெப்பம் என்பன தேவையான அளவில் தாவரத்திற்கு கிடைப்பதன் மூலம் வேர்கள் உறுதி பெற்று காய்கனிகள் நிறைந்த தாவரமாக வளர்ச்சியடையும் என்பதை நீங்கள் அறிவீர்கள். இவ்வாறான ஒரு தாவரத்தை குடும்பம் எனும் தாவரத்துடன் ஒப்பிட்டால் குடும்பம் எனும் தாவரம் வளமானதாக அமைய அதன் அடிப்படைத்தேவைகள் பூரணப்படுத்தப்பட வேண்டும் என்பது புலனாகும். குடும்ப அங்கத்தவர்களது அடிப்படைத் தேவைகளான உடல், உள, சமூக பௌதிகத் தேவைகள் குறைவின்றி நிறைவேற்றப்படுமிடத்து குடும்பம் பசுமை மிக்க வளமான குடும்பமாகத் திகழும். எனவே மகிழ்ச்சியான வாழ்க்கைச் சூழலை உருவாக்குவதற்கு குடும்பத்தின் பங்களிப்பின் அவசியம் தொடர்பான தெளிவை இப்போது பெற்றிருப்பீர்கள். அவ்வாறே குடும்ப அங்கத்தவரது கடமைகளும், பொறுப்புகளும் தொடர்பாக நீங்கள் அறிந்து கொள்ளுதலும் அவசியமானதாகும்.


## குடும்பத்தின் கடமைகளும் பொறுப்புக்களும்

நவீன தொழில்நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக அதிவேகமாக மாற்ற மடையும் சமூதாயத்தில் மனிதனது வாழ்க்கை முறையும் மாற்றமடைந்து கொண்டு வருகின்றது. அன்று குடும்பத்தின் மிகக் கூடிய பொறுப்புக்கள் மனையாளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் தற்காலத்தில் அவை படிப்படியாக மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளன. இன்று மனையாளும் தொழிலுக்காக வீட்டிலிருந்து வெளியே செல்ல வேண்டியிருப்பதால் குடும்பத்தின் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்புக்கள் ஏனைய அங்கத்தவரிடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் இல்லத்தை ஆரோக்கியமான மகிழ்ச்சிகரமான இடமாக ஆக்குவது சகல அங்கத்தவரினதும் கடமையாகும். இதன் காரணமாக குடும்ப அங்கத்தவரிடையே வேறுப்பட்ட கடமைகளும் பொறுப்புகளும் ஒப்படைக்கப்படுகின்றன என்பதை நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பீர்கள்.

தந்தை தாய் பிள்ளைகள் என்றவகையில் வெவ்வேறு நடிபங்கினை வகிக்கும் குடும்பத்தின் அங்கத்தவர் அனைவரும் குடும்பத்தின் பொதுவான குறிக்கோளை அடையும் நோக்குடனேயே செயற்படுகின்றனர். குடும்பம் எனும் தாவரம் வளமாக வளர அதன் அடிப்படைத் தேவைகளான முன்னேற்றம், ஒற்றுமை என்பன போன்றே குடும்பத்திற்குரிய சட்டத்திட்டங்கள், பழக்கவழக்கங்கள் என்பன கட்டியெழுப்பப்படுதால் குடும்பத்தின் பொதுவான இலக்கை இலகுவாக அடைய முடிகின்றது.

குடும்பத்தின் ஒற்றுமை, சாந்தி, சமாதானம், முன்னேற்றம் என்பவை நிலைத்திருப்பது இவற்றிற்கிடையேயான பரஸ்பர தொடர்பைப் புரிந்து கொண்டு செயற்படுவதில் தங்கியுள்ளது.

பின்வரும் அட்டவணையை அவதானிப்பதன் மூலம் குடும்ப அங்கத்தினரது பரஸ்பர கடமைகளையும் பொறுப்புகளையும் விளங்கிக் கொள்ள முடியும்.




குடும்பத்தில் கணவனால் மனைவிக்கும் மனைவியால் கணவனுக்கும், பெற்றோரால் பிள்ளைகளுக்கும் பிள்ளைகளால் பெற்றோருக்கும், சகோதரனால் சகோதரிக்கும், சகோதரியால் சகோதரனுக்கும் குடும்பத்தினூடாக சமூகத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும் உள்ளன என்பதை பின்வரும் படத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

கீழே காணப்படுவது குடும்ப அங்கத்தவர்கள் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளும் பொறுப்புகளும் பற்றியதாகும்.



கணவனால்

- தனது மனைவியை/கணவனை கௌரவமான முறையில் ஏற்றுக் கொள்ளுதல்
- குடும்ப அங்கத்தவரது தேவைகளைப் பூர்த்தி செய்தல்
- பண்பான வார்த்தைகளைப் பிரயோகித்தல்
- குடும்பத்தின் பாதுகாவலராகச் செயற்படல்
- இரு சாரரது உறவினர்களையும் சிறந்த முறையில் கவனித்தல்
- வீட்டு வேலைகளில் இருவரும் சேர்ந்து செயலாற்றுதல்.
- பிள்ளைகளைப் பாதுகாத்து வழி நடத்துதல்
- கணவன் மனைவி, மனைவி கணவனுக்கும் நம்பிக்கை உடையவர்களாக இருத்தல்



மனைவியால்

பெற்றோரால் பிள்ளைகளுக்கு



- பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுதல்.
- சிறந்த போசாக்கினை வழங்குதல்.
- கற்றலுக்கான வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- சிறந்த பழக்க வழக்கங்களை ஏற்படுத்துதல்..
- நற்செயல்களில் ஈடுபடுத்தல்.
- நோயுற்ற வேளைகளில் நன்கு பராமரித்தல்.
- பாதுகாப்பை வழங்குதல்.
- சிறந்த ஆளுமையுள்ள நற்பிரஜைகளை உருவாக்குதல்.
- பொருத்தமான காலத்தில் சொத்துக்களை ஒப்படைத்தல்.
- ஆதனங்களைப் பாதுகாத்தல்.





பிள்ளைகளால் பெற்றோருக்கு



- சிறு வயதிலிருந்தே அதிகூடியளவில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
- பெற்றோர் பெரியோர்களுக்கு மதிப்பளித்தல்.
- குடும்ப அங்கத்தவர் என்ற ரீதியில் உச்ச அளவில் பொறுப்புக்களை ஏற்றல்.
- வயோதிபத்தில் பெற்றோருக்கான போசாக்கினை பெற்றுக் கொடுத்து பாதுகாத்தல்.
- பெற்றோரிடம் இருந்து கிடைத்த சொத்துக்களை பாதுகாத்து அவற்றை முறையாக அனுபவித்தல்.
- குடும்பத்தின் பொருளாதாரத்திற்கு தீங்கு விளைவிக்காது சிக்கனமாக செயற்படுதல்.
- குடும்ப கௌரவத்திற்கு கேடு விளைவிக்கும் செயல்களில் இருந்து விலகி நடத்தல்.
- தமது பரம்பரையைப் பாதுகாத்தல்.



சகோதரனால்/ சகோதரியினால்



- வயதில் மூத்த சகோதரன் / சகோதரியரையும் தமக்கு இளைய வர்களையும் பாதுகாத்தல்.
- முன்மாதிரியாக நடந்து கொள்ளுதலும் முன்மாதிரிகளைப் பின்பற்றுதலும்.
- கீழ்ப்படிதலும் மதிப்பளித்தலும்.
- மூத்த சகோதர / சகோதரிகள் இளையோருக்கு நற்செயலுக்கான வழியைக் காட்டுதல்.
- மனைச் செயற்பாடுகளில் ஒருவருக்கொருவர் உதவி செய்தல்.
- கல்வி தொடர்பான செயற்பாடுகளில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு வழங்குதல்.



## குடும்பத்தினால் சமுதாயத்திற்கும், சமுதாயத்தினால் குடும்பத்திற்கும் நிறை வேற்றப்பட வேண்டிய கடமைகளும் பொறுப்புக்களும்

- குடும்பமானது ஒரு பிரதான அலகு என சமுதாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்படல்.
- உடல், உள, மனவெழுச்சி, சமூகம் ஆகியவற்றில் வளர்ச்சியடைந்த சமநிலையான ஆளுமையையுடைய பிள்ளையை சமூகத்திற்கு வழங்குதல்.
- சமூகத்திற்கு சமாதானம், ஒற்றுமை, மகிழ்ச்சி என்பவற்றைப் பாதுகாத்துக் கொடுப்பதற்கு குடும்பம் உறுதுணையாக இருத்தல்.
- சமூகப் பணியில் செயற்துடிப்புடன் ஈடுப்பட்டு தமது பங்களிப்பை வழங்குதல்.
- தமது தொழிலை அல்லது சேவையை மிகவும் சிறப்புடனும் நேர்மையுடனும் செய்தல்.
- தமது அயலவரின் அல்லது உறவினர்களின் தேவைகளின் போது உதவி செய்தல்.

இவ்வாறான கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதன் மூலம் சிறந்த குடும்பச் சூழலையும் மகிழ்ச்சியான வாழ்க்கைச் சூழலையும் உருவாக்குவதற்கு குடும்பத்தின் பங்களிப்பு எவ்வாறாக அமைய வேண்டுமென்பதை மேலே முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் மூலம் தெளிவாகி இருக்கும். நீங்கள் இதுவரை பெற்றுக் கொண்ட அறிவைப் பயன்படுத்தி பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

## பொழிப்பு

குடும்பம் என்பது சமூகத்தின் மிகச் சிறிய அலகாகும். குடும்ப அங்கத்தவர்களின் உடல், உள, சமூக, பௌதிகத் தேவைகள் நிறைவேற்றப்படுவதன் மூலம் மகிழ்ச்சியான வாழ்க்கைச் சூழலைக் கட்டியெழுப்பலாம். குடும்ப அங்கத்தவர்கள் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் சரிவர நிறைவேற்றுவதன் மூலம் மகிழ்ச்சியான வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்துவதில் நாமும் பங்களிப்புச் செய்யலாம்.

### செயற்பாடு 1.1

பின்வரும் விடயங்களை விளங்கிக் கொண்டு மகிழ்ச்சிகரமான குடும்பச் சூழலை ஏற்படுத்துவதில் குடும்பத்தின் பங்களிப்பினை எடுத்துரைக்கும் குறு நாடகம் ஒன்றிற்கான பிரதியொன்றினை எழுதி வகுப்பறையில் முன்வையுங்கள்.

- இந்தக் குடும்பத்தில் பெற்றோர், முன்பிள்ளைப் பருவத்தையுடைய பிள்ளையொன்று, யௌவன பருவத்தையுடைய மகன், பாட்டியொருவர் ஆகியோர் வாழ்கின்றனர் என கற்பனை செய்து கொள்ளுங்கள்.
- பாட்டியார் தமது பேரன், பேத்தியின் நலன்கள் தொடர்பாக கவனித்துப் பார்ப்பார்.
- தந்தையும் தாயும் சகல வார இறுதி நாட்களிலும் வியாபார நிலையங்களுக்குச் சென்று குடும்பத்திற்கு அவசியமான பொருட் பண்டங்களைக் கொள்வனவு செய்வார்.
- பிள்ளைகள் இருவரும் வார இறுதி நாட்களில் தாய் தந்தையின் வேலைகளுக்கு உதவி செய்வர்.
- மகிழ்ச்சியான வாழ்க்கைச் சூழலை உருவாக்கிக் கொள்வதற்காக பெற்றோர் உழைப்பர்.



இலவசப் பாடநூல்

**பயிற்சி**

1. குடும்பம் என்பதை வரைவிலக்கணப்படுத்துக.
2. கருக்குடும்பம், கூட்டுக்குடும்பம் என்பவற்றை ஒப்பிடுக.
3. மகிழ்ச்சியான வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்துவதில் குடும்பத்தின் உடல், உள, சமூக, பௌதிக தேவைகள் நிறைவேற்றப்படுவதன் அவசியம் தொடர்பான உமது கருத்துக்களை விளக்குக.

## மனையொன்றைத் திட்டமிடுதலும் ஒழுங்கமைத்தலும்

உடலுக்கு நலத்தையும், மனதிற்கு அமைதியும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பது. முறையாகத் திட்டமிடப்பட்ட மனையினூடாகவேயாகும். இதன் மூலம் குடும்ப அங்கத்தவர்களது அந்நியோன்னிய தொடர்புகள், அன்பு, அரவணைப்பு மற்றும் உடல், உள நலங்கள், தனித்துவம், சுதந்திரம், சுகாதாரம், பாதுகாப்பு என்பன குறைவின்றிக் கிடைக்கின்றன. அத்துடன் பௌதிகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் மனையானது பெரிதும் உதவுகின்றது. அவ்வாறாக பாரிய செயற்பாட்டை நிறைவேற்றும் மனையை முறையாகத் திட்டமிடலும் ஒழுங்கு செய்தலும் மிகவும் முக்கிய செயலாகும்.

மனை தொடர்பாக சமுக விஞ்ஞானிகள் முன்வைத்துள்ள சில கருத்துக்கள் தொடர்பாக கவனம் செலுத்துவோம்.

வில்லியம் கில்பிறட் என்ற சமுக விஞ்ஞானியினால் தயாரிக்கப்பட்ட 'மனை முகாமைத்துவம்' என்ற நூலில் மனை தொடர்பாக இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

- கணவன் மனைவி ஆகிய இருவரதும் ஒற்றுமையின் பலனைப் பெற்றுக்கொள்வதற்காக நிர்மாணிக்கப்பட்ட ஆக்கப்பூர்வமான இடம் ''மனையாகும்''.
- பெற்றோர் மூலம் பிள்ளைகளுக்காக வழங்கப்படும் அன்பு, பாதுகாப்பு நிறைந்த கேந்திர நிலையம் ''மனையாகும்''என்பது இன்னுமொரு கருத்தாகும்.

### மனை

ஒரு நபரது உடல், உள, சமூக, பௌதிகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதன் முலம் வெற்றிகரமான வாழ்க்கையைப் பெற்றுக் கொள்வதற்கு மனை பெரிதும் உதவுகின்றது.

குடும்ப அங்கத்தவரது எண்ணிக்கையில் ஏற்படும் வேறுபாடுகள் காரணமாக மனையின் அளவு, தன்மை என்பவற்றில் மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. எனினும் நம் அனைவரினதும் தேவைகள் ஓரளவிலாயினும் நிறைவுபடக் கூடியவாறு மனையானது அமைதல் வேண்டும். மனையொன்றினைக் கட்டியெழுப்பும் போது பிரதேசத்தில் கிடைக்கும் பிரதேச வளங்களைப் பயன்படுத்துதல் சிறந்தது வச திகள், வாழ்வியல் முறைமைகள் என்பன பல்வகைமையில் செல்வாக்குச் செலுத்துபவையாக அமையும். இவ்வாறாக தனியாள் தேவைகளைக் கருத்திற் கொண்டு மனையொன்றினைக் கட்டியெழுப்புதல் அவசியமாகும்.

உதாரணம் : விவசாயத்தை தொழிலாகக் கொண்டவர்கள் அவர்களின் தேவைக்கேற்ப தமது மனையை அமைத்துக்கொண்டுள்ளனர். அவ்வாறான மனைகளில் விறாந்தை ஆகிய பகுதிகள் மனையின் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருக்கும். வீட்டுத்தோட்டச் செய்கைக்காக பெரும்பகுதி நிலம் ஒதுக்கப்பட்டிருக்கும்.

மற்றும் பல்வேறுபட்ட தொழில்கள், சனத்தொகை அதிகரிப்பு, போக்குவரத்து வச திகள் மூலம் காணப்படும் மனையின் திட்டங்கள் வேறுபடுகின்றன. நிலத்தின் அளவு வரையறுக்கப்பட்டது என்பதால் நகர்ப்புறங்களில் வாழும் மக்கள் தம் தேவைகளுக்கேற்ப வெவ்வேறுபட்ட மனைகளில் வாழ்கின்றனர்.

உதாரணம் : அடுக்குமாடி வீடுகள், தொடர் வீடுகள்

மனிதனது பல்வேறுபட்ட தேவைகளைக் கவனத்திற் கொண்டு ஒரு மனையைக் கட்டியெழுப்பு கையில் அவதானிக்க வேண்டிய காரணிகள் பற்றி ஆராய்வோம்.

## மனையொன்றிற்கான நிலத்தைத் தெரிவு செய்யும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

மனையைக் கட்டியெழுப்புவதற்காக மேற்கொள்ளப்படும் சகல தீர்மானங் களின் போதும் வரையறுக்கப்பட்ட காரணியாக அமைவது ஒவ்வொருவரினதும் பொருளாதாரமாகும். மனிதனது எல்லையற்ற சகல தேவைகளையும் நிறை வேற்றிக் கொள்ளும் எதிர்பார்ப்பில் மனையொன்றினைக் கட்டியெழுப்புவது கடினமாகும். எனவே அங்கத்தவர்களின் அத்தியாவசிய தேவைகளை ஓரளவாவது நிறைவேற்றும் மனையொன்றினைக் கட்டியெழுப்புதலில் கவனம் செலுத்துதல் வேண்டும். வரையறுக்கப்பட்ட பணத்தை உச்ச அளவில் பயன்படுத்தி நடைமுறையில் சௌகரியமானதும் பயன்பாட்டுக்கு உகந்ததுமான மனையொன்றினைக் கட்டியெழுப்புவதன் மூலம் குடும்ப அங்கத்தவர்கள் திருப்திகரமான வாழ்க்கையை அனுபவிக்க முடியும்.

## பொருளாதாரம்

மனையொன்றினைக் கட்டியெழுப்புகையில் முதலாவதாக பொருத்தமான நிலத்தைத் தெரிவு செய்து கொள்ளல் அவசியமானதாகும். அத்துடன் வாழ்வதற்குப் பொருத்தமான வீட்டை அமைப்பதற்கான தளத்திட்டம் ஒன்றினைத் தயார் செய்து கொள்ள வேண்டும். இவை அனைத்தையும் முறையாக நிறைவேற்றிக் கொள்வதில் குடும்பப் பொருளாதாரமானது செல்வாக்குச் செலுத்துகின்றது. குடும்பப் பொருளாதாரம் என்பதிலிருந்து கருதப்படுவது பணத்தேவையாகும். அதாவது பணமானது எத்தகைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளப் பயன்படுகின்றது என ஆராய்ந்து பார்ப்போம்.

நிலத்தைத் தெரிவு செய்யும் போது தம்மால் செலவு செய்யக் கூடிய தொகையை முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இப்பணமானது வாங்கப்படும் நிலத்தின் தரம், அதன் அளவுப் பிரமாணம், பெறுமதி என்பன செலவழிக்கும் தொகைக்கு ஏற்றதாக இருக்கின்றதா என்பதனை கவனத்திற் கொள்வது மிகவும் அவசியமாகும்.

மனையொன்றைக் கட்டியெழுப்புவதற்கும் அதனைத் திட்டமிடுவதற்கும் பணம் செலவாகும்.
எனவே,

- தளத்திட்டத்தை வரைதல். (மனைத்திட்ட வரைபாளர் / கட்டடக் கலைஞர்)
- வரையப்பட்ட தளத்திட்டத்திற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல்.
- மனையைக்கட்டியெழுப்புவதற்காக உழைப்பைக்கொடுப்போருக்குச் செல வழித்தல். (கூலி)

உதாரணம் :

- மேசன்மார்
- தச்சர்
- நீர்க்குழாய் அமைப்போர்
- மின்சார வேலைகள் செய்வோர்
- கட்டிடப் பொருள்களை விநியோகம் செய்வோர்

போன்றோருக்குப் பணமானது தேவையாகும். மனையொன்றினைக் கட்டி யெழுப்புகையில் தேவையான நிலத்தை வாங்குவதற்கும், அதனைத் திட்டமிடுவதற்கும் பணப்பற்றாக்குறை காணப்படுமாயின் கடன் வசதிகளைப்பெறுவது தொடர்பாக அறிந்திருப்பது மிக முக்கியமானதாகும்.

உதாரணம் : பல்வேறுபட்ட வங்கிகள், பல வகையான கடன் பெற்றுக்கொள்ளக் கூடிய சங்கங்கள்.

## மனையைக் கட்டியெழுப்புவதற்கு நிலத்தைத் தெரிவு செய்யும் போது கவனிக்க வேண்டியவை

### நிலத்தின் தன்மை

மகிழ்ச்சிகரமான வாழ்க்கைச்சூழலுக்கு உதவும் வகையில் மனையைத் திட்டமிடுகையில் நிலத்தின் தன்மை தொடர்பாக விசேடமாக கவனம் செலுத்துதல் வேண்டும். மனையின் நீண்டகாலப் பாவனை, அதன் உறுதிப்பாடு என்பன மண்ணின் இயற்கைத்தன்மையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது, எனவே வீடமைக்க சம தரையான இறுக்கமான நிலம் மிகவும் சிறந்தது. இறுக்கமான தரை கொண்ட சமதரையான நிலத்தில் இடப்படும் அத்திவாரத்தின் செலவு குறைவாக இருக்கும். நிரப்பப்பட்ட நிலத்தில் கட்டப்படும் வீடுகளில் வெடிப்புக்கள் ஏற்பட்டு அத்திவாரம் இறங்குவதற்கும் இடமுண்டு. அவ்வாறான நிலங்களைத் தெரிவு செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும். இவ்வாறான இடங்களில் வீடு கட்டுவதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது அதற்கென விசேட பாதுகாப்புத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இதற்கு மேலதிகமான பணம் செலவாகும்.

### பிரச்சினையற்ற (சிக்கலற்ற) காணி உறுதி

பூமியின் பெறுமதி நிலைத்திருப்பது அதன் பிரச்சினையற்ற காணி உறுதியின் மூலமேயாகும். பிரச்சினைகளற்ற காணி உறுதி என்பது சட்டரீதியான தனி உரித்துக் கொண்டுள்ளது என்பதனைக் குறிக்கும். அதாவது அடகு, குத்தகை என்பவற்றுடன் ஏனைய பிரிவுகளுக்கு உட்படாதிருக்கின்றதா என்பதை உறுதிப்படுத்தும் ஆவணமாக இது அமைந்து இருக்க வேண்டும்.

காணிப்பதிவாளர் காரியாலயத்தினால் இவ் ஆவணம் பரிசீலனை செய்யப்பட்டு முறையாகப் பதிவு செய்யப்பட்டிருப்பின் சட்டத்தரணியொருவரின் மூலம் வழங்கப்படும் காணி உரிமைப்பத்திரத்தின் வாயிலாக, உறுதியின் பிரச்சனையற்ற தன்மை வெளிப்படுத்தப்படுகிறது. பிரச்சனையற்ற ஆட்சி உரிமை பிரச்சனையற்ற எல்லை என்பவற்றுடன் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட தனிப்பட்ட பாதையாயின் அதன் உரிமையை, பெற்றுக் கொள்பவரின் வசமிருந்து காணியின் உறுதி மூலம் நாம் பெற்றுக்கொள்ள முடியும். வீட்டுக் கடன் பெறுவதற்கு காணி உறுதியின் நம்பகத்தன்மை மிக முக்கியமாகும்.

### உட்கட்டமைப்பு வசதிகள்

நிலத்தைத் தெரிவு செய்யும் போது அப்பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றத்தினூடாக வழங்கப்படும் சேவைகளுக்கேற்ப பொதுவசதிகளை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

- நீர் வசதிகள்
- மின்சார வகதிகள்
- பொதுப் போக்குவரத்து வசதிகள்
- கழிவுப்பொருள்களை வெளியேற்றும் வசதிகள்
- சுகாதார வசதிகள்
- சமூக தொடர்புகளைக் கட்டியெழுப்பும் வசதிகள்.
  உதாரணம் : விளையாட்டு மைதானம், மக்கள் மன்றங்கள்
- மழை நீர் வழிந்தோடக் கூடிய வழி

## சுற்றுப்புறச் சூழல்

மகிழ்ச்சிகரமான வாழும் சூழலை உருவாக்கிக் கொள்வதற்காக சுற்றுப்புறச்சூழலில் கிடைக்கின்ற உதவி மிகவும் பயனுடையது. சுற்றுப்புறச் சூழலானது கண்கவர் அழகுடன் இருத்தல் வேண்டும். சுதந்திரமான சுற்றுச் சூழலால் அங்கு வாழ்வதற்கு விருப்பு ஏற்படும். அவ்வாறாயின் சுற்றுபுறச் சூழலானது மாசடைதலில் இருந்து விடுபட்டு சுத்தமானதாக இருக்கும். அவ்வாறான சூழலில் இருக்கக்கூடிய இயல்புகள் பின்வருமாறு,

- கழிவுப் பொருள்கள் குப்பை கூழங்கள் ஒன்று சேர்க்கப்படும் இடங்கள் அண்மையில் இல்லாதிருத்தல்.
- ஒலி மாசடைதல் குறைவான இடமாக இருத்தல்.
- அதிக தூசு, புகை என்பவற்றில் இருந்து தவிர்க்கப்பட்ட பிரதேசமாக இருத்தல்.
- அயலவர்களின் தொல்லைகளில் இருந்து விலக்கப்பட்ட பிரதேசமாக இருத்தல்.
- வெளிச்சம், காற்றோட்டம் ஆகியவற்றுக்குத் தடை ஏற்படாத சூழல் அமையப் பெறல்

## நிலத்தின் பிரமாணமும் அமைவும்

நிலம் செவ்வகமாகவோ அல்லது சதுரமாகவோ இருப்பது வீட்டுத் தளத்திட்டத்தை வரையும் போதும் கட்டியெழுப்பும் போதும் சுலபமாக இருக்கும். வேறு வடிவமான நிலம் அல்லது பள்ளமான நிலமாயின் விசேடமான தளத்திட்டம் அமைக்கப்படுவதோடு சிலவேளை அதற்காக மேலதிக செலவும் ஏற்படலாம்.

எனினும் நிலத்தின் வடிவமும் அமைவும், அளவுப்பிரமாணமும் வேறு படாதவாறு மனையை அமைத்துக் கொள்வதாயின் அது திட்டமிடலின் திறமையில் தங்கியுள்ளது.

உதாரணம் : நிலத்தின் உயரமான பகுதியை சமாந்தரப்படுத்தாமல் அதே அளவில் வைத்தே திட்டமிடுவதும், சூழலுக்குத் தீங்கு ஏற்படும் விதத்தில் அமைந்துள்ள பூமியில் வீட்டைத் திட்டமிடுதலும் சிறந்ததல்ல.

உதாரணம் : மண்ணரிப்பு ஏற்படக் கூடிய விதத்தில் இருக்கும் பள்ளமான நிலம் ஏற்ற இறக்கமான நிலம் என்பன இருக்கும் இடங்களுக்கருகில் வீட்டைக் கட்டுகையில் அது தொடர்பாகத் தேவைப்படும் சகல பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கருத்திற்கொண்டு திட்டமிடல் வேண்டும்.

வீட்டில் வசிப்போரது வாழ்க்கை முறைக்கேற்பவும், அவர்களது தேவைகளை நிறைவேற்றும் விதத்திலும் வீட்டை அமைக்கத் திட்டமிடும் போது பூமியின் அளவு தீர்மானிக்கப்படுகின்றது. வீட்டுத்தோட்டம் அமைத்தல், விலங்குகள் வளர்த்தல் போன்ற வீட்டுக் கைத்தொழில்கள் வீட்டிலேயே நடைபெறுமாயின் அதற்குப் பொருத்தமான அளவு நிலத்தைத் தெரிவு செய்து அதற்கேற்ப தளத் திட்டத்திட்டத்தை வரைய முடியும். வீட்டின் அளவு குடும்பத்தின் தேவைகளை ஓரளவாயினும் நிறைவேற்றக் கூடியவாறு திட்டமிடப்படல் வேண்டும். பெரும்பாலும் நகர்ப்புறங்களில் காணியின் பெறுமதி அதிகமாகையால், வரையறைக்குட்பட்ட நிலத்திலேயே வீடுகள் அமைக்கப்படுகின்றன.

வீட்டை அமைக்கும் போது ''நகர அபிவிருத்தி அதிகாரசபையின்'' வீடமைப்புச் சட்டத்தின் கீழ் அல்லது, வீடமைப்பு நகர நிர்மாண அபிவிருத்தி திருத்தச் சட்டமூலத்தின் விதிகளின் படி, அல்லது உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் வெளியிடப்பட்டுள்ள சட்டவிதிகளின் படி அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறான அனுமதியைப் பெற்றதன் பின்னரே மனையொன்றினை நிர்மானிக்கலாம்.

## நிதி வசதிகள்

மனைக்கான தளத்திட்டம் வரையும் போது அதற்காக செலவழிக்க வேண்டிய பணத் தொகை தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். பொருளாதார நிலைக்கேற்ப தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியவாறு அதனை நிர்மாணித்தல் வேண்டும். மனையை அமைக்கும் போது தம்மிடமுள்ள பணம் போதாத சந்தர்ப்பத்தில் கடன் பெறக் கூடிய வழிகள் தொடர்பாக அறிந்திருத்தல் அவசியம்.

உதாரணம் : பல்வேறு வங்கிகள், கடன் சங்கங்கள் போன்றன.

## குடும்பத்தின் தேவைகள்

மனையை அமைக்கத் திட்டமிடும் போது குடும்பத்தின் தேவைகள் பற்றிய அவதானத்தைச் செலுத்துதல் வேண்டும்.

குடும்பத்தின் எதிர்கால நலன்கள் பற்றி கருத்திற்கொண்டு குடும்பத்தின் தேவைகளைக் கவனித்து, மனையொன்றினைத் திட்டமிடுவது தொடர்பாக தீர்மானத்திற்கு வர வேண்டும். அவ்வாறு திட்டமிடும் போது குடும்பத்தில் அங்கத்தவர்களின் எண்ணிக்கை பற்றியும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

உதாரணம் : கருக்குடும்பத்திற்கு தேவைப்படும் இடவசதியை விட கூட்டுக் குடும்பத்திற்கு அதிக இடவசதி தேவையாகும்.

குடும்பத்தில் வாழும் போது நாளாந்தம் பல்வேறு காரியங்களை நிறைவேற்ற வேண்டியுள்ளதால் அதற்குப் பொருத்தமானவாறு மனையைப் பகுதிகளாக்கல் தொடர்பாக தளத்திட்டம் வரையும் போதே கவனித்தல் வேண்டும்.

### மனையின் பல்வேறு பகுதிகளும் அவற்றின் செயற்பாடுகளும்

மகிழ்ச்சியாக வாழும் சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு நாம் வாழும் வீட்டை, குடும்ப அங்கத்தவர்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் கட்டியெழுப்புவது மிக முக்கியமானதாகும். அவ்வாறு அங்கத்தவர்களது தேவைகள் நிறைவேறும் வகையில் மனையின் பகுதிகளைப் பிரித்துக் கொள்வது பற்றி அவதானத்தைச் செலுத்துவோம்.

பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுவதன் மூலம் வீட்டின் பல்வேறு பகுதிகள் அவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தொடர்பாக கூடிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**செயற்பாடு 1.2**

01. குடும்பத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் பல கீழே காணப்படுகின்றன. அதனைக் கருத்திற் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.

**செயற்பாடுகள்**

- விருந்தினரை வரவேற்றல்.
- சந்தோசமாகவும் சமாதானமாகவும் இருத்தல்.
- உணவு சமைத்தல்.
- உணவு உட்கொள்ளல்.
- ஓய்வும் பொழுது போக்கும்.
- மதக் கடமைகளில் ஈடுபடல்.
- தொலைக்காட்சி பார்த்தல்.
- குடும்பப் பொருளாதார நடவடிக்கைகள்.
- குப்பை கூழங்கள் அகற்றப்படுதல்.
- உள்ளக விளையாட்டுக்களில் ஈடுபடுதல்.
- கல்வி சார் நடவடிக்கைகள்.
- சுகாதார வசதிகள்.
- குழந்தைகளைப் பாதுகாத்துக் கொள்ளல்.

| வாழ்வதற்குத் தேவையான அவசிய காரணிகள் | அதற்காக மனையில் உரிய பகுதி |
|---|---|
| உதாரணம் : உணவு சமைத்தல் | உதாரணம் : சமையலறை |
| ........................................................ | .................................................. |
| ........................................................ | .................................................. |
| **ஏனைய செயற்பாடுகள்** | **அதற்காக மனையில் உரிய பகுதி** |
| உதாரணம் : கல்வி நடவடிக்கைகள் | உதாரணம் : நூலக அறை |
| ........................................................ | .................................................. |
| ........................................................ | .................................................. |

## ஒளியும் வளியோட்டமும்

ஆரோக்கியமான சூழலொன்றைக் கட்டியெழுப்புவதற்காக இயற்கையான ஒளியும், வளியும் கிடைக்கும் வகையில் வீட்டைத் திட்டமிடுதல் அவசியமாகும்.

நீங்கள் வாழும் சூழலில் காணப்படுகின்ற வீடுகளில் கதவு, யன்னல்கள், காற்றிடை வெளிகள் என்பவற்றின் ஊடாக குளிர் அல்லது கதகதப்புத் தன்மையை உணர்ந்திருப்பீர்கள். அது போன்றே உடல் நலத்திற்கும் சுகாதாரப் பாதுகாப்புக்கும் துணையாக இருப்பது இயற்கையான ஒளியும் வளியோட்டமுமாகும்.

மனையினுள் காணப்படும் வளி சூரியனில் இருந்து கிடைக்கும் வெப்பத்தினால் சூடாகும். இதனால் அவ்வளி விரிவடைந்து மேலெழுந்து செல்லும். இதனால் கீழ்மட்டத்தில் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்ப வெளியிலிருந்து வளி மனைக்குள் வரும். இதனாலேயே இயற்கையான காற்றோட்டம் நிகழ்கின்றது. எனவே மனைக்குள் குளிரான தன்மையை ஏற்படுத்த இந்த ''மேற்காவுகை ஓட்டம்'' உதவி புரிகின்றது. இந்த மேற்காவுகை ஓட்டத்தினால் அறைகளுக்குள் சிறந்த காற்றோட்டம் ஏற்படுகின்றது. இங்கு குறுக்குக் காற்றோட்டம் மிக முக்கியமானது.

குறுக்குக் காற்றோட்டம் எனப்படுவது ஒரு அறைக்குள் அல்லது வரவேற்பறைக்குள் வளியானது உட்சென்று அதற்குச் சமாந்தரமாக மறுபக்கத்தால் வெளியேறுவதாகும். நேர் எதிராக கதவு, யன்னல்களை வைப்பதன் மூலம் இது சாதகமாகும். இதனால் அறைக்குள் நன்கு வளி பரவும். இதனால் ஏற்படும் குளிர்த் தன்மையினால் வீட்டில் வசிப்பவர்களுக்கு சிறந்த சுக நலம் ஏற்படும்.



இலவசப் பாடநூல்

கதவு, யன்னல், காற்றிடை வெளிகள் என்பவற்றிற்கு மேலதிகமாக இயற்கையான ஒளியும், காற்றோட்டமும் கிடைப்பதற்கு பயன்படுத்தக் கூடிய வேறு முறைகளாவன.

உதாரணம் :

- நிலாமுற்றமும் தடாகமும்
- ஒளியூடு பரவக்கூடிய பைபர் சீட்
- கொங்கிறீற்று கிறில், இரும்பு வலை
- கண்ணாடிக் கற்கள்
- கூரையில் பதிக்கக்கூடிய ஒளியோடுகள்
- கூரையின் உயரத்தை அதிகரித்தல்
- கூரையின் அமைப்பிற்கு ஏற்ப பாவு அமைத்தல். (ceiling)

## இயற்கை ஒளியையும், காற்றோட்டத்தையும் தேவையான அளவில் மனையில் பெற்றுக் கொடுப்பதனால் ஏற்படும் நன்மைகள் தொடர்பாக கவனம் செலுத்துவோம்

- வீட்டிற்குள் காணப்படும் ஈரத்தன்மை அகற்றப்படும்.
- நுண்ணங்கிகளின் பெருக்கம் கட்டுப்படுத்தப்படும்.
- மனைச் செயற்பாடுகளின் போது களைப்படையாதிருத்தல்.
- மேற்காவுகையின் போது அல்லது குறுக்குச் காற்றோட்டத்தின் போது வெப்பம் குறைவடைவதனால் சுகமான நிலை உருவாகும்.
- செயற்கை ஒளியினதும், செயற்கைக் காற்றோட்டத்தினதும் தேவை குறைக்கப்படும்.

இக் கருத்துக்கள் யாவற்றையும் கவனத்திற்கொண்டு மனையைத் திட்டமிடுதல் வேண்டும்.

மனையைக் கட்டியெழுப்புவதற்கான நிலத்தைத் தெரிவு செய்தல், மனையைத் திட்டமிடுகையில் அதன் பகுதிகளை உரிய இடங்களில் ஒழுங்கு செய்தல் போன்றவற்றை மனதிற்கொண்டு மனையின் தளத்திட்ட நிர்மாணம் பற்றித் தீர்மானிக்க முயற்சி செய்வோம்.

## மனையின் தளத்திட்டத்தை வரையும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்.

- அளவு
- குறியீடு
- நடைபாதை
- இடவசதி
- தொகுதிப்படுத்தல்

- வெளிச் சூழலுடன் வீட்டைத் தொடர்பு படுத்தும் முறை (காற்றின் திசை யன்னலால் தெரியும் சுற்றுப்புற சூழல்)

தளத்திட்டம் வரைதல் தொடர்பான அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பக்கம் 25 இல் காட்டப்பட்டுள்ள திட்டத்தை நன்கு அவதானிப்பதனால் மேற் கூறப்பட்ட கருத்துக்கள் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## பரிமாணம்


தள அமைப்பின்படி ஒவ்வொரு பகுதிகளுக்கும் வெவ்வேறு விதமான உரிய பருமன் (நீளம், அகலம்) போன்ற அளவுகளைக் குறைத்துக் காட்டுதல் பரிமாணம் எனப்படும். வீட்டின் தளத்திட்டத்தை கடதாசியில் வரையும் போது அதன் அளவை சிறிதாக்கி வரைதல்வேண்டும். பக்க இலக்கம் 25 தில் முன்வைக்கப்பட்டுள்ள நில அமைப்பை அவதானிக்கையில் அங்குள்ள அளவுப்பரிமாணம் தொடர்பான ஏதாவதொரு எண்ணக்கருவை உருவாக்கிக் கொள்ள முடியும்.

இத் தளத்திட்டத்தில் 8 அடியானது ஒரு அங்குலத்தில் காட்டப்பட்டுள்ளது. (8′ = 1″ ) காட்டப்பட்டுள்ளது.

- இம் பீரியல் முறையில் அங்குலம், அடி என்ற முறையிலும்

- மெட்றிக் முறையில் சென்றிமீற்றர், மீற்றர் என்ற முறையிலும் காட்டப்படும்.

தளத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள அறைகளை நன்கு அவதானித்து அவற்றின் கதவு யன்னல்களின் அளவு தொடர்பாக அறிந்து கொள்ளவும். அதற்கு மேலாக தளத்திட்டம் வரைதலில் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட குறியீடுகள் தொடர்பாகவும் கவனத்தைச் செலுத்துங்கள்.




அளவுத்திட்டம் 8' = 1"

உரு 1.5 மனையின் தளத்திட்ட வரைபு



| இலக்கம் | மனையின் பகுதிகள் |
|---|---|
| 1 | விறாந்தை |
| 2 | வரவேற்பறை |
| 3 | சமையலறை |
| 4 | குளியலறையும் மலசலகூடமும் |
| 5 | பிரதான படுக்கையறை |
| 6 | படுக்கையறை |

| இலக்கம் | மனையின் பகுதி | பரப்பு சதுர அடி |
|---|---|---|
| 1 | விறாந்தை | 9' - 6" × 7' - 6" |
| 2 | வரவேற்பறை | 17' -7$\frac{1}{2}$ × 16' - 3" |
| 3 | சமையலறை | 10' - 0" × 10' - 0" |
| 4 | குளியலறையும், மலசலகூடமும் | 7' - 0" × 5' - 0" |
| 5 | பிரதான படுக்கையறை | 12' - 0" × 10' - 0" |
| 6 | படுக்கையறை | 10' - 0" × 10' - 0" |

| கதவு | அளவு சதுரஅடி | ஜன்னல் | அளவு சதுரஅடி |
|---|---|---|---|
| | | கண்ணாடி மரசட்டக ஜன்னல் | |
| $D^1$ மரக்கதவு | 3' - 6" × 6' - 9" | $W^1$ | 4' × 5' |
| $D^2$ மரக்கதவு | 3' - 3" × 6' - 9" | $W^2$ | 5' × 6' |
| $D^3$ ஒட்டுப்பலகைகதவு | 2' - 9" × 6' - 9" | $W^3$ | 4' × 5' |
| $D^4$ ஒட்டுப்பலகைகதவு | 2' - 9" × 6' - 9" | $W^4$ | 5' - 0" × 4' - 3" |
| $D^5$ ஒட்டுப்பலகைகதவு | 3' - 0" × 6' - 9" | $W^5$ | 5' - 0" × 4' - 3" |
| $D^6$ கதவு | 2' - 6" × 6' - 9" | $W^6$ | 6' - 6" × 4' - 3" |
| $D^7$ மரக்கதவு | 3' - 0" × 6' - 9" | $W^7$ | 4' - 0" × 4' - 3" |
| | | $W^8$ | 3' - 6" × 4' - 3" |
| | | $W^9$ | 3' - 6" × 4' - 3" |
| | | $W^{10}$ | 7' - 6" × 5' - 0" |
| | | $F^1$ காற்றிடை வெளி | 3' - 6" × 1' - 9" |

## குறியீடு

தளத்திட்டத்தை வரையும் போது பயன்படுத்தப்படுவது சர்வதேச முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட குறியீடுகளாகும். பின்வரும் குறியீடுகளை நன்கு அவதானிக்கவும்.

| தளத்திட்டத்தின் பகுதிகள் | பாவிக்கப்படும் குறியீடுகள் | |
|---|---|---|
| சுவர் |  அகன்ற கோடு  ஒடுங்கிய கோடு | கூரையின் பாரத்தை தாங்கிக் கொள்ளக்கூடியவாறு வெளிச் சுவரும், உட்சுவரும் 9 அங்குல அகலத்தில் அமைக்கப்படும். தளத்திடத்தில் அகலமாகக் காட்டப்பட்டிருப்பது தடிப்பமான சுவராகும். கூரையின் பாரத்தை தாங்காத இடங்களில் $4\frac{1}{4}$ அங்குல சுவர்கள் அமைக்கப் படும். தளத்திட்டத்தில் ஒடுங்கிய கோட்டினால் இது காட்டப்பட்டுள்ளது. |
| • இரட்டை முகப்புக் கதவு D1 | D1  | மனையின் முன் பக்கத்திற்கு இரட்டை முகப்புக் கதவுகளை அமைப்பதாயின் வரைபில் காட்டப்பட்டுள்ளவாறு அமைக்கப்பட வேண்டும். |
| • கதவு D2 | D2  | மனையின் உட்பகுதியில் கதவு களை அமைக்கும் போது படத்தில் காட்டப்பட்டுள்ள வாறு அமைக்க வேண்டும். |
| • யன்னல் W | W  | இத் தளத்திட்டத்தில் காட்டப் பட்டிருப்பது தனிப் பகுதியைக் கொண்ட யன்னலாகும். |
| • காற்றிடைவெளி | F  | இக்காற்றிடைவெளியை படத்தில் காட்டியவாறு அமைத்தல் வேண்டும். |

## நடை பாதை

பல்வேறு தேவைகளுக்காக மனையினுள் இங்குமங்கும் செல்ல வேண்டி ஏற்படும். எனவே நடை பாதையானது முறையாக அமையாவிட்டால் இது மனையில் வாழ்வோருக்கு மிகவும் இடையூறாக அமையும்.

உரு 1.5 இல் காட்டப்பட்டுள்ள தளத்திட்டத்தை நன்கு அவதானியுங்கள். அங்கு ஒவ்வொரு அறைக்கும் செல்லக்கூடியவாறு நடை பாதைகள் முறையாக அமைக்கப்பட்டுள்ளன. அம்புக்குறிகளின் மூலம் காட்டப்பட்டிருப்பது நடை பாதையாகும். ஒரு அறையிலிருந்து அடுத்த அறைக்கு நடை பாதை அமையாவிட்டால் மனையில் வசிப்போரது தனித்துவத்திற்கு இடையூறு ஏற்படும்.

## இட வசதி

மனையில் சகல செயற்பாடுகளையும் இலகுவாக செய்துகொள்வதற்கு சரியான முறையில் இடவசதியை திட்டமிட்டுக் கொள்வது முக்கியமானதாகும். மனையின் அறைகள் ஒவ்வொன்றுக்குமென தீர்மானிக்கப்பட்ட அளவுகள் உள்ளன. எனவே தளத்திட்டத்தினை வரையும் போது அவ் அளவுகளை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

- ஒரு படுக்கையறை மாத்திரம் இருக்குமிடத்து பிரதான படுக்கையறையானது (Master Bed room) 120 சதுர அடிகள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
- இரண்டாவது அறை குறைந்தது 100 சதுர அடிகள் கொண்டதாக அமைதல் வேண்டும்.
- மூன்றாவது அறை 90 சதுர அடிகள் கொண்டதாக அமைதல் வேண்டும்.

உரு 1.5 காணப்படும் தளத்திட்டத்தினை அவதானிக்கும் போது பிரதான படுக்கையறையானது 120 சதுர அடிகளாகவும் மற்றைய அறை 100 சதுர அடிகளைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இத் தளத்திட்டத்தில் கதவு, யன்னல்கள் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளன.

- அறைகளின் பரப்பளவில் இருந்து $\frac{1}{7}$ யன்னல்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
- அறைகளின் பரப்பளவில் இருந்து $\frac{1}{15}$ கதவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.
- கூரையின் உயரமானது பாவுவிலிருந்து $9\frac{1}{2}$ இடைவெளியில் அமைந்திருத்தல் வேண்டும்.

## இணைந்த அலகு (தொகுதிப்படுத்தல்)

- பல்வேறுபட்ட தொழிற்பாடுகளைக் குறைந்த அளவிலும் கூடிய பயனுள்ளவாறும் செய்து கொள்ளக்கூடியவாறு மனையின் பகுதிகள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருப்பது இணைந்த தொழிற்பாட்டு அலகு என்று கூறப்படும். மேற்குறித்த தளத்திட்டத்தில் தொகுதிப்படுத்தல் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அவதானியுங்கள்.
- படுக்கையறையிலிருந்து குளியலறை, மலசலகூடம் என்பவற்றிற்கு இலகுவாகச் செல்வதற்கு இவை அருகில் அமைக்கப்பட்டிருத்தல்.
- விறாந்தை வரவேற்பறைக்கு அருகில் அமைந்திருத்தல்.
- சமையலறையின் ஒரு பகுதியை சாப்பாட்டறை அல்லது களஞ்சிய அறையாக மாற்றிக்கொள்ளல்.
- மனையில் நடைபெறும் செயற்பாடுகளுக்கு ஊறு ஏற்படாமல் அறைகள் ஒன்றிற்கொன்று அருகில் வெவ்வேறாக்கப்படுவதனால் மனையில் இணைந்த அலகுகள் முறையாகச் செயற்படுகின்றன என்பது தெளிவாகும்.

தளத்திட்டத்தை வரையும் போது அவதானிக்க வேண்டிய காரணங்களைக் கவனத்திற்கொண்டு பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

### செயற்பாடு 1.3

பின்வரும் தகவல்களுக்கேற்ப மனையொன்றின் தளதிட்டத்தை வரைந்து வகுப்பில் முன்வையுங்கள். இதற்காக வெள்ளைக் கடதாசியொன்றினையும் எட்டு அங்குலங்களாகப் பிரிக்கக்கூடிய அடிமட்டம் ஒன்றினையும் பயன்படுத்துங்கள்.

- வரவேற்பறை
- படுக்கையறை
- சமையலறை
- குளியலறையும் மலசலகூடமும்

மனையின் பரப்பளவினைக் காட்டுவதற்கு அளவீட்டினை நீங்கள் விரும்பியவாறு தீர்மானியுங்கள்.

மனையொன்றினைக் கட்டியெழுப்புவதற்காக நிலத்தை தெரிவு செய்கையில் அதற்கென தளவரைபை வரைவதில் கவனம் செலுத்த வேண்டிய காரணிகள் தொடர்பாக அறிந்துள்ள நீங்கள் அடுத்ததாக வீட்டை ஒழுங்குபடுத்துதல் தொடர்பாகக் கவனித்தல் வேண்டும்.

## வீட்டை ஒழுங்குபடுத்துதல்

வீட்டை ஒழுங்குபடுத்தும் போது காற்றோட்டம், இடவசதி, நடைபாதை, தளபாடங்கள், உபகரணங்கள் ஏனைய பொருள்கள் என்பவற்றை ஒழுங்கு செய்தல் தொடர்பாக கவனமெடுத்தல் வேண்டும்.

குடும்பத்தின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியவாறு வீட்டை சிறந்த முறையில் ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு பின்வரும் காரணிகளைக் கவனத்திற் கொள்ளுங்கள்.

## அறைகளின் அமைப்பு

மனையின் பௌதிக அமைப்பு தொடர்பான ஒழுங்கமைப்பின் போது அறைகள் பற்றி சிந்தித்தல் அவசியமாகும். உரு 1.5 ல் காட்டப்பட்டுள்ள மனையினது தளத்திட்ட வரைபில் உள்ள அறைகளுக்கான அமைவிடத்தை அவதானிக்கும் போது குறைந்த செலவில் கூடிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியவாறு அறைகள் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. மனையின் செயற்பாடுகள் யாவும் ஒன்றோடொன்று தொடர்புபடும் விதமாக அறைகள் அமைந்திருப்பதனால் வீடு முறையாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். இத் தளத்திட்ட வரைபின் படி

- விறாந்தைக்கு அருகில் வரவேற்பறை.
- சமையலைறைக்கு அருகில் சாப்பிடும் இடம்.
- படுக்கையறைக்கு அருகில் குளியலறையும், மலசலகூடமும்.

இவ்வாறான அறைகளுக்கிடையேயான ஒழுங்கமைப்பில் ஒரு ஒழுங்கு முறை இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் கதவு, யன்னல் என்பவை பற்றி கவனத்திற் கொள்ளுதல் அவசியமாகும்.

## கதவு யன்னல்களின் அமைவிடம்

வீட்டின் தளத்திட்ட அமைப்பை வரையும் போதும், ஒழுங்கமைக்கும் போதும் கதவு, யன்னல்களை அமைப்பது பற்றி பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

இது தொடர்பாக பின்வரும் காரணிகளில் அவதானத்தை செலுத்துவது முக்கியமாகும்.

- மனையின் அந்தந்த இடங்களுக்குப் பொருத்தமான முறையில் பல்வேறு பட்ட கதவு, யன்னல்களை அமைத்தல்.
  உதாரணம் : வரவேற்பறைக்கு மரக்கதவு, குளியலறைக்கு பிளாஸ்டிக் கதவு, உள்ளறைக்கு மென்மரக்கதவு (plywood)
- இயற்கை ஒளியும் காற்றோட்டமும் கிடைக்கக் கூடிய வகையில் சூரியனின் உதயமும் அஸ்தமனமும் நிகழும் திசைகளில் கதவு, யன்னல்களை அமைத்தல்.

- இடத்தைச் சிக்கனமாகப் பாவிக்கவும், தனிப்பட்ட பாதுகாப்புக்காகவும் படுக்கை அறைகளில் கதவுகள் இருக்கும்படி அவற்றை அறையின் மூலைகளில் அமைத்தல்.
- கதவு அறையின் உட்புறமாகக் திறக்கும் விதத்தில் அமைக்கும் போது குறைந்த இடப்பிரமாணத்தை எடுக்கத்தக்கதாக அமைய வேண்டும்.
- விறாந்தை, வரவேற்பறை என்பவற்றிற்குப் பொருத்தமான வகையில் உயரத்தில் கூடிய யன்னல்களை அமைத்தல்.
- படுக்கை அறைகளின் யன்னல்களுக்கு ஒளியூடுபுகவிடும் கண்ணாடிகளை அமைத்தல்.
- குறுக்குக் காற்றோட்டம் போதியளவுக்கு கிடைக்கும் விதமாக கூடியளவு சமாந்தரமாக அமைந்த சுவர்களில் கதவு, யன்னல்களைப் பொருத்துதல்.

செயற்திறனையும் கவர்ச்சியையும் ஏற்படுத்தும் வகையில் மனையைத் திட்டமிடுவதில் பல் தொழிற்பாட்டு அலகுகள், பல்தொழிற்பாட்டு உபகரணங்கள் என்பவற்றைப் பயன்படுத்துதல் பிரதானமானது.

## பல் தொழிற்பாட்டு அலகுகள்

வரையறுக்கப்பட்ட இடவசதி உள்ள போது மனையின் பகுதிகளை பல்தொழிற் பாட்டலகுகளாக ஒழுங்கமைத்துக் கொள்ள முடியும். வெவ்வேறு வேலைகளை செய்துகொள்ள ஒரே இடத்தைப் பயன்படுத்துதல் பல்தொழிற்பாட்டுப் பகுதிகள் என அறிமுகப்படுத்தலாம். இதனால் பிரதான செயற்பாட்டிற்கு இடையூறு ஏற்படாமல் ஏனைய கருமங்களை நிறைவேற்றிக் கொள்ள இயலுமாக இருக்கும்.

உதாரணம்

- சமையலறையின் ஒருபகுதி களஞ்சிய அறையாகவோ சாப்பாட்டறை யாகவோ பயன்படுத்தப்படுதல்.
- வரவேற்பறையின் ஒரு பகுதியை சாப்பாட்டறையாக ஒதுக்கிக் கொள்ளுதல்.
- படுக்கையறையின் ஒரு பகுதி படிக்கும் அறையாக ஒதுக்கப்படுதல்.

## பல்தொழிற்பாட்டுத் தளபாடங்கள்

மனையில் இடவசதி வரையறுக்கப்பட்டிருக்கும் போது காலம், உழைப்பு, பணம் என்பவற்றை சிக்கனப்படுத்திக் கொள்ள பல்தொழிற்பாட்டுத் தளபாடங்கள் அவற்றிற்கே உரிய தேவைகளுக்கு மாத்திரமின்றி மேலதிகமான வேறு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

உதாரணம் :

- வரவேற்பறையில் உள்ள மெத்தையிருக்கை (Divan) இரவில் படுக்கைக்காகப் பயன்படுதல்.
- இலாச்சுக்களுடனான கட்டில் படுக்கைவிரிப்பு, தலையணை உறை
- என்பவற்றைச் சேமித்து வைப்பதற்குப் பயன்படுத்தப்படுதல்.

இவ்வாறே வரையறுக்கப்பட்ட இடவசதி கொண்ட இடங்களில் உச்ச பயன்பாடுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அவையாவன,

- அடுக்குக்கட்டில்
- சுவரில் பொருத்தக்கூடிய மடிக்கும் மேசை
- மடிக்கும் கட்டில்
- மடிக்கும் உடுப்பு இறாக்கை

போன்றவை

## மனையை ஒழுங்கு செய்யும் போது அலங்காரம் செய்தல்

வீட்டை ஒழுங்கு செய்யும் போது அலங்காரம் செய்வதற்கு பல்வேறு துணையணிகள் பயன்படுத்தப்படுகின்றன.

- பல்வேறு மலர்கள் தாவர அலங்காரங்கள்
- அலங்காரப் பொருட்கள்
- படங்கள்
- சுவர் அலங்காரங்கள்
- நிழற்றிகள்
- மணிக்கூடு
- கம்பளம்

மனையின் பல்வேறு பகுதிகளுக்கும் பொருத்தமான பயனுள்ள துணையணிகளைப் பயன் படுத்துவதன் மூலம் மனையின் அலங்காரத்தைப் பெறமுடியும்.

உதாரணம் :

- வீட்டின் ஒவ்வொரு அறைக்கும் பொருத்தமான மலர்களை ஒழுங்கு செய்தல்.
- அறைகளுக்கு ஏற்ற வகையில் படங்கள், சுவர் அலங்காரங்கள், மணிக்கூடுகள், நிழற்றிகள் என்பவற்றைப் பயன்டுத்தி வீட்டை ஒழுங்கு செய்வதன் மூலம் கவனத்திற்கொள்ள வேண்டிய காரணிகளைக் கருத்திற் கொண்டு குடும்பத்தின் தேவைகளையும், வீட்டின் தேவைகளையும் நிறைவு செய்து கொள்ள முடியும்.

### குடும்பத்தின் தேவைக்கேற்ப வீட்டை ஒழுங்கு செய்தல்

வீட்டைத் திட்டமிடும் போது குடும்பத்தின் தேவைகளைக் கருத்திற் கொள்வது அவசியமாதலால் குடும்ப அங்கத்தவர்களுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைத்தல் வேண்டும்.

- குடும்பத்தில் புதிதாக ஒரு குழந்தை பிறந்தால் அதற்கேற்ப அறையொன்றை ஒழுங்கு செய்தல்.
- தினந்தோறும் நடைபெறும் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக நடைபெறும் காரியங்களுக்கு அனுகூலமாக வீட்டை ஒழுங்கு செய்தல்.

உதாரணம் : வியாபாரத் தேவைகளுக்காக வீட்டை ஒழுங்கு செய்தல் கற்றல் தேவைகளுக்காக நூலக அறையை ஒதுக்குதல்.

குடும்ப அங்கத்தவரது உடல், உள, சமுக, சௌக்கிய பௌதிக தேவைகளுக்கு ஏற்ற வகையில் வீட்டை ஒழுங்கு படுத்திக் கொள்வதால் பௌதிக சூழல் அழகானதாகவும், ஆரோக்கியமானதாகவும் அமையும் என்பது உறுதி.

#### பொழிப்பு

- குடும்பம், குடும்பத்தின் வகை, குடும்பத்தின் வெவ்வேறு பருவங்கள், குடும்ப அலகு என்பவற்றை அறிந்து கொள்வதனால் மகிழ்ச்சியான சூழலை அமைத்துக் கொள்ள உதவும்.
- குடும்ப அங்கத்தவரது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுதல் போன்றே குடும்பத்தின் அந்நியோன்னிய தொடர்புகள், பொறுப்புக்கள், கடமைகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதன் மூலம் மகிழ்ச்சி மிகு குடும்பச் சூழலை உருவாக்கிக் கொள்ள முடியும்.
- மனையொன்றை திட்டமிடும் போது நிலம், குடும்பத்தின் தேவைகள், மனையின் பகுதிக்கும் அதன் செயற்பாடுகளுக்கும், ஒளியும், காற்றோட்டமும் கிடைக்கக்கூடிய விதம் ஆகியன தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.
- குறியீடுகளைப் பயன்படுத்தி பொருத்தமான அளவுப் பரிமாணத்தில் தளத்திட்டம் வரையப்பட வேண்டும்.மனையைத் திட்டமிடும் போதும், பௌதிக ஒழுங்கமைப்பின் போதும் அறைகளின் அமைப்பு, அதன் இடவசதி, மாற்றுத் தொழிற்பாட்டலகு என்பன தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.

- இணைந்த அலகுகள், உபகரணங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதனால் காலம், உழைப்பு, இடவசதி, பணம் என்பவற்றை சிக்கனப்படுத்திக் கொள்ள இயலும்.
- பல்தொழிற்பாட்டு அலகுகள் பல் தொழிற்பாட்டு உபகரணங்களை உபயோகிப்பதால் காலம், பணம், உழைப்பு, இடவசதி என்பன சிக்கனப்படுத்தப்படும்.
- குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதாக வீட்டை ஒழுங்கு படுத்துவதால் அதனை விருப்பத்திற்குரிய இடமாக மாற்ற முடியும்.

**கணிப்பீடு**

- மனையொன்றினைக் கட்டியெழுப்புவதற்கு நிலத்தைத் தெரிவு செய்கையில் கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் எவை எனக் குறிப்பிடுக.
- அத்தியாவசிய தேவைகளுக்காக வீட்டை பகுதிகளாகப் பிரிக்க வேண்டிய முறையைத் தருக.
- அந்தப் பகுதிகள் உள்ளடக்கப்படும் வகையில் மனையொன்றிற்கான தளத்திட்டத்தை வரைக. (பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்தி அளவுப் பிரமாணத்தை வரைக.)
- வீட்டை ஒழுங்குபடுத்தும் போது பல்தொழிற்பாட்டலகு, பல்தொழிற் பாட்டு உபகரணங்கள் என்பவை முக்கியமானதாகும். இதனைப் பற்றி உங்கள் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துங்கள்.